

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (14.8.2025) முகாம் அலுவலகத்தில், காவல்துறை தலைமை இயக்குநர் . சங்கர் ஜிவால் தனது பிறந்தநாளையொட்டி குடும்பத்தினருடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.8.2025) தலைமைச் செயலகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் புதுக்கோட்டை, திருப்பத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் 9 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள முதலமைச்சர் சிறுவிளையாட்டரங்கங்கள்3, தென்காசி மாவட்டத்தில் 15 கோடி ரூபாய் செலவில் பல்வேறு விளையாட்டு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள மாவட்ட விளையாட்டு வளாகம், சென்னை, திருச்சி, மதுரை, கடலூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் 6 கோடியே 38 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 5 பாராவிளையாட்டு மைதானங்கள், கோவில்பட்டியில் 7 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஹாக்கி விளையாட்டு மாணவர்களுக்கான முதன்மை நிலை மையம் ஆகியவற்றை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, ஆகியோர் கலந்துகொண்டனர்.

### பொருளாதாரத்தில் நலிந்த பட்டியலின –

# பிற்படுத்தப்பட்ட சாதியினருக்கும் 10 சதவிகித சலுகையில் இடம் உண்டா?

## மக்களவையில் – கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு கேள்வி!



புதுடெல்லி, ஆக.15-

2019 முதல் பொருளாதார ரீதியாக நலிந்த பிரிவினருக்கு ஒன்றிய அரசு 10 சதவீத இட ஒதுக்கீடு சலுகை வழங்கி வருகிறது. ஆனால், இந்தச் சலுகை பட்டியல் இன மற்றும் பழங்குடி சமுதாய மக்களுக்கு வழங்கப்படுவதில்லை. அதைப் போலவே, இந்தச் சலுகை இதரபிற்பட்ட சமுதாய மக்களும் இந்த 10 விழுக்காடு இட ஒதுக்கீட்டில் சேர்க்கப் படவில்லை. இவர்களுக்கு சாதி அடிப்படையில் சமுதாய ரீதியாகவும் கல்வியிலும் பின்தங்கியவர்கள் என்ற காரணத்தால் மட்டுமே இட ஒதுக்கீடு சலுகை வழங்க அரசியல் சட்டம் வழிசெய்கிறது.

ஆனால், பொருளாதார ரீதியாக நலிந்த பிரிவினருக்கு 10 சதவீத இட ஒதுக்கீட்டை 2019 முதல் ஒன்றிய அரசு அளித்து வருகிறது. இதற்கான அரசியல் சட்ட திருத்தத்தையும் ஒன்றிய பாஜக அரசு செய்தது. இந்நிலையில், இந்த பொருளாதார ரீதியான அடிப்படையில் வழங்கப் படும் 10 சதவீத சலுகையில் பொருளாதார ரீதியாக பின்தங்கிய, பட்டியல் சாதியினர், பழங்குடியினர், இதரபிற்படுத்தப் பட்ட சாதியினர் உள்ளிட்ட அனைத்து சமுதாய பிரிவினவருக்கும் வழங்க பட வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்று வருகிறது.

இந்நிலையில், இந்த கோரிக்கை தொடர்பான கேள்வி ஒன்றை நாடாளுமன்றத்தில் மக்களவை திமுக குழுத்தலைவர் டி.ஆர்.பாலு எழுப்பினார். இந்த கேள்விக்கு ஒன்றிய சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் துறையின் இணை அமைச்சர் பி.எல். வர்மா நேற்று முன்தினம் (12.8.2025) மக்களவையில் பதிலளித்தார்.

**10 சதவீத சலுகைத் தேர்வர் தகுதி பட்டியல் சாதியினர் தகுதியை விடவும் குறைவானதா?**

பொருளாதார ரீதியாக நலிவடைந்த பிரிவினருக்கு வழங்கப்படும் சலுகையில் பட்டியல் சாதி, பழங்குடி மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட சமுதாயப் பிரிவினரும் சேர்க்கப்பட வேண்டும் என்ற வலுவான கோரிக்கையை அரசு அறிந்துள்ளதா? அப்படியானால் அதன் மீதான அரசின் முடிவின் விவரம் என்ன? அரசு இது தொடர்பான கோரிக்கையை ஏற்கவில்லை என்றால் அதற்கான காரணம் என்ன? மேலும், பொருளாதார அடிப்படையில் மட்டுமே அமைந்துள்ள 10 சதவீத இட ஒதுக்கீட்டு சலுகையின் கீழ் தேர்ந்தெடுக்கப் படுபவர்களின் தேர்வு மதிப்பெண் பட்டியல் சாதி மற்றும் இதர பிற்படுத்தப் பட்ட தேர்வர்களைவிடவும் கணிசமாகக் குறைவானதாக பல அரசு நியமனங்களில் உள்ளதா?அப்படியென்றால் இந்த நிலையை சரி செய்ய ஒன்றிய அரசினால் என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்? என்று பல்வேறு விஷயங்கள் குறித்து தனது கேள்வியில் டீ.ஆர்.பாலு எம்.பி. எழுப்பி இருந்தார்.

**அரசிடம் தரவுகள் இல்லை!**

“2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அரசியலமைப்பு சட்டத்தின் 103 வது திருத்தத்தின் அடிப்படையில் பொருளாதார ரீதியாக நலிவடைந்த பிரிவை சேர்ந்த வர்களுக்கு அரசுசார் நியமனங்களிலும் கல்வி நிலையங்களிலும் 10 சதவீதம் அளவு வரை இட ஒதுக்கீடு வழங்கப் படுகிறது. இதனை நடைமுறைப்படுத்துவதில் அரசு உறுதிபூண்டுள்ளது. பொருதாரத்தில் நலிவுற்ற பிரிவினர் (இ.டபுள்யூ.எஸ்) நியமனங்கள் தொடர்பான புள்ளி விவரங்கள் துறைவசம் இல்லை”

இவ்வாறு அமைச்சர் வர்மா தெரிவித்துள்ளார்.

### நெல்லையில் மூளைக்காய்ச்சல் தடுப்பூசித் திட்ட தொடக்க விழா!

# பள்ளி மாணவ - மாணவிகள் 566 பேருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டது!

## மேயர் ராம கிருஷ்ணன் முன்னிலையில்!

நெல்லை, ஆக.15-

நெல்லை மாநகராட்சி மேயர் கோ.ராம கிருஷ்ணன், மாநகராட்சி ஆணையாளர் மருத்துவர் மோனிகா ராணா,துணை மேயர் கே.ஆர்.ராஜ் ஆகியோர் முன்னிலையில் ம.தி.தா.இந்து மேல்நிலைப் பள்ளி நடைபெற்ற ஜப்பானிய மூளைக் காய்ச்சல் தடுப்பூசி திட்டத்தின் தொடக்க விழாவில் ம.தி.தா. இந்து மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகள் 566 பேருக்கு ஜப்பானிய மூளைக்காய்ச்சல் தடுப்பூசி செலுத்தப் பட்டது.

2025-2026 ஆம் ஆண்டு மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை மானிய கோரிக்கை அறிவிப்பின்படி ஜப்பானிய மூளை காய்ச்சல் தடுப்பூசி திட்டம் ஏற்கனவே 15 மாவட்டங்களில் தேசிய தடுப்பூசி திட்டத்தின் கீழ் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு வந்தது கூடுதலாக 13.08.2025 அன்று 7 மாவட்டங்களுக்கு விரிவாக்கம் தொடக்க விழா நடைபெற்றது.

ஜப்பானிய மூளை காய்ச்சல் தடுப்பூசியானது தமிழக அரசின் 2025-2026-ம் ஆண்டு மானிய கோரிக்கை எண் 109ன் படி காஞ்சிபுரம்,செங்கல்பட்டு, திருநெல்வேலி, தென்காசி, சென்னை (ஏற்கனவே செயல்படுத்தப்படும் 2 மண்டலங்கள் தவிர அனைத்து மண்டலங்கள்) ஆகிய 5 மாவட்டங்களுக்கு தெளிவு படுத்தப்படும் என்ற அறிவிப்பின்படி திருநெல்வேலி மாவட்டத்தில் 1 முதல் 15 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு ஜப்பானிய மூளைக்காய்ச்சல் தடுப்பூசி திட்டம் தொடங்கப் பட்டது.

அதன்படி நெல்லை மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன்,துணை மேயர் கே.ஆர்.ராஜு ஆகியோர் முன்னிலையில் நெல்லை ம.தி.தா.இந்து மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற ஜப்பானிய மூளை காய்ச்சல் தடுப்பூசி திட்டத்தின் தொடக்க விழாவில் மாநகராட்சி ஆணையாளர் மருத்துவர் மோனிகா ராணா அப்பள்ளியின் மாணவ, மாணவிகள் 566 பேருக்கு ஜப்பானிய மூளைக்காய்ச்சல் தடுப்பு ஊசியை செலுத்தி துவக்கி வைத்தார்.

ஜப்பானிய மூளை காய்ச்சல் தடுப்பூசி அளிக்கப்படுவதன் மூலம் மூளைக்காய்ச்சல் வராமல் தடுக்க முடியும் ஜப்பானிய மூளை காய்ச்சல் வைரஸ் நோய் விஷ்ணுகி கொசுக்கள் மனிதர்களை கடிப்பது மூலமாக பரவுகிறது.நெல் கரும்பு சாகுபடி செய்த நிலங்களில் தேங்கியுள்ள நீரில் கியுலெக்ஸ் வகை கொசுக்கள் உற்பத்தியாகிறது.பன்றி. குதிரை மற்றும் நாரை போன்ற உயிர்களை கடித்த பின்பு இந்த கொசுக்கள் மனிதனை கடிப்பதன் மூலம் ஜப்பானிய மூளை காய்ச்சல் ஏற்படுகிறது. இந்த காய்ச்சல் பாதிக்கப்படுபவர்களில் 25 சதவீதம் பேர் மட்டுமே குணமடைகின்றனர் 50 சதவீதம் பேருக்கு கை,கால்,மூளை செயல் இழப்பு ஏற்படுகிறது.மீதம் 25 சதவீதம் பேர் உயிரிழக்கும் அபாயம் உள்ளது.

5 வயது முதல் 15 வயதுடைய குழந்தைகளுக்கு அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஆகஸ்ட் 13 முதல் செப்டம்பர் 12 வரை திங்கள், வியாழன் மற்றும் வெள்ளி கிழமைகளில் அதிகபட்சமாக 12 நாட்களுக்கு தடுப்பூசி முகாம் நடைபெறுகிறது.அதை தொடர்ந்து விடுபட்ட குழந்தைகளுக்கு ஒரு வாரம் தடுப்பூசி போடப்படும்.

மாவட்ட சுகாதார அலுவலர் மற்றும் மாவட்ட தாய்சேய் நல அலுவலர் மேற்பார்வையில் கிராம, நகர சுகாதார செவிலியர்கள் மற்றும் தேவைப்படும் இடங்களில் இடைநிலை சுகாதார செவிலியர்கள் ஆகியோரால் தடுப்பூசி கள் போடப்படும்.

நிகழ்வில் தச்சை மண்டல தலைவர் ரேவதி மாமன்ற உறுப்பினர்கள் கீதா, வசந்தா,பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருத்துவத்துறை கூடுதல் இயக்குனர் மருத்துவர் சம்பத்குமார், துணை இயக்குனர் (ஆரம்ப சுகாதார நிலையம்) மருத்துவர் செந்தில்குமார், மாவட்ட சுகாதார அலுவலர் வேல்முருகன், உதவி ஆணையாளர் ஜான்சன் தேவசகாயம்,மாநகர் நல அலுவலர் (பொ) மருத்துவர் ராணி,சுகாதார அலுவலர் முருகன்,சுகாதார ஆய்வாளர் இளங்கோ, பள்ளி தலைமை ஆசிரியர் சொக்கலிங்கம் மற்றும் பள்ளி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.




சென்னை, எழிலகத்தில், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி தலைமையில் நேற்று முன்தினம் (13.08.2025) அரசு விதிகளுக்கு ஏற்ப தரமான நெல் அரைப்பை உறுதி செய்தல், அரிசி ஈரப்பதம், நிறம், சுத்தம் போன்ற தரச் சான்றுகளை பின் பற்றுதல், பொது விநியோகம் மற்றும் பிற அரசுத் திட்டங்களுக்கு அரிசியை நேரத்திற்குள் வழங்கும் திட்டமிடல் ஆகியவை குறித்து துறை அலுவலர்கள் மற்றும் நெல் அரவை முகவர்களுடனான கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மை செயலர் சத்ய பிரத சாகு, தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் அ. ஜான் லூயிஸ், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை இயக்குநர் சு சிவராசு, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### நெல்லை மாவட்டம் களக்காடு நகராட்சி,7 பேரூராட்சிக்கு ரூ.423.13 கோடி மதிப்பீட்டில்

# தாமிரபரணி கூட்டுக் குடிநீர் - திசையன்விளை பேரூராட்சி 12,000 வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு!

## பேரவைத்தலைவர் மு.அப்பாவு துவக்கி வைத்தார்!

நெல்லை, ஆக.15-

திருநெல்வேலி மாவட்டம், களக்காடு நகராட்சி,7 பேரூராட்சி பகுதிகளுக்கு ரூ.423.13 கோடி மதிப்பீட்டில் தாமிரபரணி கூட்டுக் குடிநீர் திட்டப் பணிகள் விரைவாக நடைபெற்று வருகிறது. நேற்று முன் தினம் (13.08.2025) திசையன்விளை பேரூராட்சியில் உள்ள 12000 ம் வீடுகளுக்கு குடிநீர் வீட்டு இணைப்புகள் வழங்கும் பணியினை சட்டப் பேரவைத்தலைவர் மு.அப்பாவு,மாவட்ட ஆட்சியர் மரு. இரா.சுகுமார் தலைமையில் மாவட்ட ஊராட்சித்தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஸ் முன்னிலையில் துவக்கி வைத்தார்.

பின்னர் சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு தெரிவித்ததாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்ற நாள் முதல் மக்களுக்காக பல்வேறு எண்ணற்ற சிறப்பு திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகிறார்கள். திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி,இராதாபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட களக்காடு நகராட்சி,நாங்குநேரி உட்பட 7 பேரூராட்சிகளுக்கு சென்னையை போன்று குடிநீர் தட்டுப்பாடின்றி கிடைக்கும் வகையில் ரூ.423.13 கோடி நிதி ஒதுக்கீடு செய்து சேரன்மகாதேவி தாமிரபரணி ஆற்றில் இருந்து நீர் ஆதாரம் எடுத்து திரு வித்தான்புள்ளியில் வந்து நீர் சுத்திகரிப்பு செய்து அங்கிருந்து களக்காடு நகராட்சி,ஏர்வாடி, திருக்குறுங்குடி, நாங்குநேரி, பணகுடி, மூலைக்கரைப்பட்டி, திசையன்விளை, வடக்கு வள்ளியூர் ஆகிய அனைத்து பேரூராட்சிகளுக்கும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் கொண்டு செல்லப்பட்டு மேல் நிலை நீர் தேக்க தொட்டிகளில் சேமிக்கப்பட்டு அனைத்து இல்லங்களுக்கும் வழங்கப்பட உள்ளது.இப்பணிகள் 75 சதவீதம் முடிவுற்றுள்ளது. விரைவில் இப்பணிகள் முடிக்கப்பட்டு அக்டோபர் மாதம் இறுதிக்குள் இல்லங்களுக்கு குடிநீர் வழங்கப்படும். இதற்கான பணிகள் விரைவாக நடைபெற்று வருகிறது.

முதற்கட்டமாக திசை யன் விளை பேரூராட்சி பகுதியில் உள்ள அனைத்து வீடுக ளுக்கும் இணைப்புகள் வழங்கும் பணி இன்று தொடங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 6 பேரூராட்சிகளிலும் விரைவில் தொடங்கி அனைத்து இல்லங்களுக்கும் இணைப்புகள் வழங்கப்பட்டு திருவித்தான் புள்ளியில் இருந்து குடிநீர் விநியோகிக் கப்பட்டு தாமிரபரணி கூட்டு குடிநீர் களக்காடு நகராட்சி மற்றும் 7 பேரூராட்சிகளுக்கு நபர் ஒருவருக்கு 135 லிட்டர் வீதம் கிடைக்கப் பட உள்ளது.இப்பணிகளுக்காக சாலைகள் மற்றும் தெருக்களில் குடிநீர் குழாய்கள் அமைக்கும் பணிகள் விரைவாக அமைக்கப்பட்டு வருகிறது.சோதனை ஓட்டங்கள் முடிந்த பிறகு பழுதடைந்த சாலை மற்றும் தெருக்கள் சரி செய்யப்படும். இப்பகுதி மக்களுக்கு நீண்ட நாள் எதிர்பார்ப்பாக இருந்த தாமிரபரணி கூட்டு குடிநீர் அனைவருக்கும் கிடைக்கப் பெறவுள்ளது.இதற்கு முதலமைச்சர் அவர்களுக்கு இப்பகுதி மக்கள் சார்பாக நன்றியை தெரிவித்து கொள்கி றேன்.

தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு மக்களின் அன்றாட தேவைகளை அறிந்து மக்களின் நலன் கருதி பல்வேறு சீர் மிகு திட்டங்களை ஒவ்வொரு நாளும் கொண்டு வந்து தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காக அல்லும் பகலும் பாடுபட்டு வருகிறார்கள். அனைத்து தரப்பு மக்களையும் சமமாக நினைத்து தமிழ்நாட்டில் கொண்டுவரப்பட்டு வரும் அனைத்து திட்டங்களும் எல்லோருக்கும் கிடைக்க வேண்டும் என்ற உன்னத நோக்கத்தோடு தமிழ்நாடு அரசு செயல்பட்டு வருகிறது.

கலைஞர் மகளிர் உரிமை தொகை விடுபட்டவர்கள் விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருகிறது,தகுதியான நபர்களுக்கு விரைந்து வழங்கப்படும்.மேலும் உங்களுடன் ஸ்டாலின்,நலன் காக்கும் ஸ்டாலின் போன்ற பல்வேறு திட்டங்கள் பகுதி வாரியாக சிறப்பாக நடைத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் பல்லாயிரக்கானோர் பயனடைந்து வருகின்றனர். மேலும் விரைவில் கிராம ஊராட்சிகளுக்கும் தாமிரபரணி கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் அனைத்து இல்லங்களுக்கும் குடிநீர் வழங்கப்பட உள்ளது.மக்கள் நலனிலே அக்கறையாக செயல்படும் முதலமைச்சர் அவர்களுக்கு நாம் எப்போதும் நன்றி கடன்பட்டவர்களாக இருப்போம்.

இவ்வாறு பேரவை தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.

தொடர்ந்து நேற்று முதல்வர் அவர்கள் கொண்டு வந்த தாயுமானவர் திட்டத்தின் கீழ் திசையன்விளை பேரூராட்சி பகுதிக்கு உட்பட்ட முருகேசபுரத்தில் நுகர்பொருள் வாணிப கழகத்தின் மூலம் 70 வயதை கடந்த முதிய வர்கள், மாற்றுத்திறனாளிகள், இல்லங்களுக்கு சென்று ரேசன் பொருட்களை பேரவைத்தலைவர் மு.அப்பாவு வழங்கினார்.

நிகழ்வில் கண்காணிப்பு பொறியாளர் செந்தில்குமார், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் முருகேசன், செயற்பொறியாளர் மோசஸ், பணகுடி பேரூராட்சி தலைவர் தனலெட்சுமி தமிழ்வானன்,உதவி செயற்பொறியாளர் பாக்கிய ராஜ், களக்காடு நகராட்சி துணை தலைவர் பி.சி.ராஜன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் பாஸ்கர்,பேரூராட்சி உறுப்பினர்கள் கமலா சுயம்புராஜன், கண்ணன், அலேக்ஷ்,சரஸ்வதி, உதயா, நடராஜன் உட்பட அரசு அலுவலர்கள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

100வது பிறந்த நாள்



கழக அமைப்புச் செயலாளர்
ஆர்.எஸ்.பாரதி அவர்களின் தாயார்
திருமதி ஜே.விஜயலட்சுமி ராமன்
பிறந்த நாள்: 15.8.1925 ❖ மறைந்த நாள்: 27.7.2001
100வது பிறந்த நாளில் நினைவு கூரும்
திருமதி. சௌதாமினி சாய் பிரசாத்
ஆர். சாய் சுந்தர் - திருமதி கீதா சாய் சுந்தர்
ஆர்.எஸ். பாரதி- டாக்டர் திருமதி சம்பூர்ணம்
டாக்டர் சாய் மோகன் - திருமதி பத்மலட்சுமி
திருமதி சாய் காமாட்சி - டாக்டர் சுப்ரமணியம்
திரு. ஞானசேகர்
மற்றும் பேரன், பேத்திகள் - கொள்ளுப் பேரன்,பேத்திகள்